10th November 1965]

Project will be entrusted to a Limited Company in the public sector and the Government of India are taking steps to form a Limited Company under the Indian Companies' Act; and

(b) It is understood that the Australian Government would be assisting this Project with finance under the Colombo Plan for purchasing equipment. The factory will produce bread on sound and scientific lines and economically. The capacity of the plant may be 30,000 loaves of 1 lb. per day of 24 hours.

குடிநீர் வழங்குதல்

* 411 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** *கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—*

திண்டிவனம் வட்டத்திலுள்ள சாரம் கிராமத்தில் அரிஜன காலனிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

கனம் திரு. கோ. பூவராகன் : *தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தைச் சேர்ந்த ஒலக்கூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள சாரம் கிராமத்தில் ராட்டினக் கிணறு ஒன்று இருக்கிறது. இக் கிணற்றிலிருந்து ஹரிஜனங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படும். மேற்சொன்ன கிணற்றிலிருந்து பரண் தொட்டி ஒன்றில்* (overhead tank) *நீரை நிரப்பிக்கொண்டு குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதற்காக அத் தொட்டியைக் கட்டும் வேலை நடந்து வருகின்றது. இதன் கல் கட்டிட வேலைகளும் தொட்டியின் மேல் தளமும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. குழாய்களும் பொருத்தப் பட்டுவிட்டன. மோட்டார் பம்பு ஒன்று வாங்கி சீக்கிரம் தண்ணீர் வழங்குவதற்காக ஒலக்கூர் பஞ்சாயத்து யூனியனும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.*

திரு. ஆ. தங்கவேலு : *கனம் தலைவர் அவர்களே, இந்த சாரம் ஹரிஜனக் காலனிக்கு இந்தக் குடிநீர் திட்டத்திற்கு, இன்றைய கனம் முதல் அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் 5—7—1960-ல் கல்நாட்டு விழா செய்தார்கள். இப்பொழுது ஐந்தாண்டுக் காலமாக அதைச் செய்து முடிக்காததற்குக் காரணம் என்ன என்று அறிவிக்க முடியுமா ?*

கனம் திரு. கோ. பூவராகன் : *இந்தக் குடிநீர் திட்ட வேலை பஞ்சாயத்திற்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் நிதி வசதியைப் பொருத்திருக்கிறது. அரசாங்கத்தில் ஒன்றும் காலதாமதம் இருப்பதாகத் தெரியவில்லை.*

Cultural Heritage of India

* 412 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal to publish copies of mural paintings and proto-type of sculptures and architects of important temples in the State with a view to acquaint the people of the cultural heritage of India; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : வட ராஜ்யங்களிலே அஜந்தா குகை போன்ற இடங்களில் உள்ள சித்திரங்களை எடுத்து வெளியிடு கிறார்கள். அதே போல நம்முடைய மாநிலத்திலுள்ள சித்தன்ன வாசல் மூரல் பெய்ண்டிங்குகளை வெளியிட்டு, எல்லோருக்கும் விநி யோகிக்க சர்க்கார் முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : நம்முடைய ராஜ்யத்திலும் முயற்சி எடுக்கப்பட்டு, சிதம்பரம், ஸ்ரீரங்கம் கோவில்களில் சுவற்றில் இருக்கும் சித்திரங்களை எடுத்து மதராஸ் மியூசியத்தில் வைத்திருக் கிறார்கள். பல இடங்களில் வைக்கவும் ஏற்பாடு இருக்கிறது. போஸ்டல் கார்டுகளில் படங்கள் போட்டும் அவற்றை மக்களுக்கு விநியோகிக்கிறார்கள்.

கிராம அபிவிருத்தித் திட்டங்கள்

* 413 கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம் : கனம் செய்தி விளம் பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கிராம அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்கென மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 15 கோடியை, தேசீய நெருக்கடி காரணமாக 1966-67 ஆண்டு வரை செலவு செய்ய வேண்டும் எனப் பிறப்பிக்கப் பட்ட உத்தரவை மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இல்லை.

மானாமதுரை மண்பாண்டத் தொழிலாளர் சங்கம்

* 414 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரையிலுள்ள மண் பாண்டத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து (பதிவு எண் 1425) மண்பாண்டம் சுடுவதற்காக சூளை ஆரம்பிக்க நில ஆர்ஜிதம் செய்யக் கோரி அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) மானாமதுரை மண்பாண்டத் தொழிலாளர் சங்கத்திற் காகச் சூளை ஒன்று கட்டுவதற்குத் தேவையான நிலத்தை அரசாங் கச் செலவில் ஆர்ஜிதம் செய்ய உத்தேசம் உள்ளது. 1894-ம் ஆண்டு நில ஆர்ஜிதச் சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் அறிவிப்பு, தேவை யான நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு, வெளியிடப்படும்.